மாண்புமிகு திரு ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, "தமிழ்நாடு 1970-ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 8/70) நிறைவேற்றப்படவேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

4. அரசினர் தீர்மானம்—தொடர்ச்சி.

(ஆ) பேரவை அலுவல் வரிசையில் மாற்றம்.—தொடர்ச்சி.

THE HON. THIRU S. MADHAVAN: Sir, I move.—

"That under Rule 21 of the Assembly Rules, the Tamil Nadu Panchayats (Amendment) Bill, 1970 (L.A. Bill No. 10 of 1970) be taken up before all other Bills."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

8. அரசினர் மசோதாக்கள்—தொடர்ச்சி.

(ஈ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு பஞ்சாயத்துகள் (திருத்த) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 10/70).

* **மாண்புமிகு திரு. மா. முத்துச்சாமி:** தலைவரவர்களே, "தமிழ்நாடு 1970-ஆம் ஆண்டு பஞ்சாயத்துகள் (திருத்த) மசோதா †(சட்டப் பேரவை மசோதா எண் 10/70) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

தமிழக உள்ளூர் ஆட்சி நிறுவனங்கள் எல்லாம் நேரடி முறையின் மூலமே தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்ற அடிப்படையின் முதல் கட்டமாக ஊராட்சி மன்றங்களின் தலைவர்களை மக்களே நேரிடையாகத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்ற அரசின் முடிவு சென்ற ஆண்டு இப்பேரவையில் அறிவிக்கப்பட்டது. அதைச் செயல்படுத்தும் முறையில்தான் இம்மசோதாவை உங்கள் முன் வைத்துள்ளேன். ஓர் ஊராட்சியிலுள்ள வாக்காளர்கள் தங்களில் ஒருவரைத் தலைவராகத் தாங்களே நேரடியாகத் தேர்ந்தெடுப்பதற்கு இம்மசோதா வகை செய்கிறது. துணைத் தலைவர் முன் போலவே ஊராட்சி உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுவார்.

நேரிடையாகத் தேர்ந்தெடுக்கப்படும் தலைவருக்கும், ஏனைய உறுப்பினர்களுக்கும் கருத்து வேறுபாடு காரணமாக ஒற்றுமை குன்றுமானால், அந்த ஊராட்சியின் நிர்வாகத்தை ஆறு திங்களுக்குத் தலைவரே ஏற்று நடத்துமாறு பணிக்க ஆய்வாளருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. தலைவரையோ அல்லது துணைத் தலைவரையோ பதவியிலிருந்து நீக்குவதற்கு முன் ஊராட்சியின் கருத்தை அறிந்து நடவடிக்கை எடுப்பதற்கும் வகை செய்யப்பட்டுள்ளது.

தன் கடமைகளைச் சரிவர நிறைவேற்றாத ஊராட்சி மன்றங்களைக் கலைத்து உடனடியாகத் தேர்தல் நடத்தி மீண்டும் அமைப்பதற்கும் அல்லது ஒரு குறிப்பிட்ட காலவரையறைக்குப் பின்பு தேர்தல் நடத்திப் புதிய மன்றத்தை ஏற்படுத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. குறிப்பிட்ட காலவரையறைக்குள், கலைக்கப்பட்டுள்ள ஓர் ஊராட்சி மன்றத்தை அக்கால வரம்பு முடியுமுன் நிர்வாக நலனைக் கருதி முன்னுள் உறுப்பினர்களைக் கொண்டே மீண்டும் அமைப்பதற்கும் வழி செய்யப்பட்டுள்ளது.

ஊராட்சி, ஊராட்சி ஒன்றிய உறுப்பினர் தகுதி இல்லாதவர் என்றோ, தகுதியை இழந்துவிட்டார் என்றோ தீர்மானிப்பதில் தற்போதுள்ள சட்ட நடைமுறையில் சில குறைபாடுகள் இருப்பதாகத் தெரிவதால், அப்பிரிவை மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. அதன்படி ஓர் உறுப்பினர் தகுதி இல்லாதவர் அல்லது தகுதி இழந்துவிட்டவர் என்று எடுத்துக் கூறப்படின், அந்த

† 31-3-1970 தேசிய சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.